டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 12.05.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 268 - Madurai | Online Edition

# வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம்

புது தில்லி, மே 11

2047-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை ஒரு வளர்ந்த நாடாக மாற்றும் 'வளர்ச்சியடைந்த இந்தியா' தொலைநோக்கு பார்வையை நோக்கிய பயணத்தில், கிராமப்புற மேம்பாட்டு கட்டமைப்பை மறுசீரமைக்க 'வளர்ச்சியடைந்த இந்தியா-விற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் (கிராமின்) உத்தரவாதச் சட்டம், 2025' கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டம் ஜூலை 1, 2026 முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வருகிறது. இதன் மூலம் 2005-ஆம் ஆண்டின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதிச் சட்டம் திரும்பப் பெறப்படுகிறது.

இச்சட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்திற்கும் ஒரு நிதியாண்டில் வழங்கப்பட்டு வந்த 100 நாட்கள் வேலை உத்தர வாதம் தற்போது 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. வெறும் ஊதிய வேலைவாய்ப்பாக மட்டும் இல்லாமல், கிராமப்புறங்களில் நீர் பாதுகாப்பு, கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார ஆதாரங்கள் மற்றும் பேரிடர் மேலாண்மைக்கான நிரந்தரச் சொத்துகளை உருவாக்குவதில் இச்சட்டம் முக்கிய கவனம் செலுத்துகிறது.

நிர்வாக ரீதியாக வெளிப்படைத் தன்மையை உறுதி செய்ய பயோமெட்ரிக் அங்கீகாரம், ஜியோ-டேக்கிங் மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு முறைகள் கட்டாய மாக்கப்பட்டுள்ளன. ஊதியம் நேரடியாகப் பயனாளிகளின் வங்கி கணக்குகளில் மாற்றப்படும்.

அதே நேரத்தில், பயிர் நடுதல் மற்றும் அறுவடை காலங்களில் விவசாயத் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க, மாநில அரசுகள் ஆண்டுக்கு 60 நாட்கள் வரை இந்த வேலைகளுக்கு இடைவெளி விட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு இத்திட்டத்திற்காக 2026-27 நிதியாண்டில் ரூ 95,692.31 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது, இது கிராமப்புற மேம்பாட்டுத் திட்ட வரலாற்றிலேயே மிகப்பெரிய நிதி ஒதுக்கீடாகும். மாநிலங்களின் பங்கையும் சேர்த்தால் மொத்தத் திட்ட மதிப்பு ரூ 1.51 லட்சம் கோடிக்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ‘வேலைவாய்ப்புடன் கூடிய கண்ணியம்‘ என்ற கொள்கையின் அடிப்படையில், பணித்தளங்களில் சுத்தமான குடிநீர், நிழற்குடைகள் மற்றும் முதலுதவி வசதிகள் சட்டப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும், பெண் தொழிலாளர்களின் பங்கேற்பை ஊக்குவிக்க ஐந்து வயதிற் குட்பட்ட குழந்தைகள் இருக்கும் பணித்தளங்களில் குழந்தைப் பராமரிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இச்சட்டம் கிராமப்புற இந்தியாவை நவீன, எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற மற்றும் உற்பத்தித் திறன் கொண்டதாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வெள்ளம் மற்றும் வெப்ப அலைகளைச் சமாளிப்பதற்கான நாட்டின் தயார்நிலை குறித்த உயர்மட்ட ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது

புது தில்லி, மே 11

வெள்ளம் மற்றும் வெப்ப அலைகளைச் சமாளிப்பதற்கான நாட்டின் தயார்நிலை குறித்து புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஆதரவுடன் ஜம்மு காஷ்மீர்,




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

லடாக், உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் ஆகிய பகுதிகளில் உள்ள அதிக அபாயம் நிறைந்த 30 ஏரிகளுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் அமைப்பு முறையை உருவாக்கும் திட்டத்தில், குறைந்த பட்சம் 60 ஏரிகளையாவது சேர்க்க வேண்டும் என்று கூறினார். மேலும், மத்திய மற்றும் மாநில அளவில் வெள்ள முன்னறிவிப்புக்கான ஒருங்கிணைந்த அமைப்பு முறையை அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

நாட்டின் ஒவ்வொரு மாநிலத்திலும் வெள்ள நெருக்கடி மேலாண்மைக் குழுக்கள் (FCMTs) அமைக்கப்பட்டு செயல் படுத்தப்பட வேண்டும் என்று அமித் ஷா கூறினார். தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்கள், சிறந்த விழிப்புணர்வுக்கும் அரசின் முழுமையான அணுகுமுறையின் வளர்ச்சிக்கும் வழிவகுத்து உள்ளன என்றும், ஆனால் மாநில, மாவட்ட மற்றும் நகராட்சி மட்டங்களில் இந்த வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மறு ஆய்வு செய்வது அவற்றின் செயலாக்கத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், உயிரிழப்புகள் இல்லாத பேரிடர் மேலாண்மை என்ற தொலைநோக்குப் பார்வையைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் கூறினார். நீர் சேமிப்பு மற்றும் தடுப்பணைத் திட்டங்கள் மூலம் நீர் பாதுகாப்பு மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்துவதற்கான சிறந்த சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஆறுகளில் தடுப்பணைகளைக் கட்டுவதன் மூலம் நீரைச் சேமிப்பதும், அதே நேரத்தில் வெப்ப அலைகளின் தாக்கத்தைக் குறைப்பதும் நமது நோக்கமாக இருக்க வேண்டும்.






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## குழந்தைகளுக்கான ஆரோக்கியமான / வயது வரம்பிற்கேற்க ஸ்நாக்ஸ் வகைகள்

நேற்றைய தொடர்ச்சி...

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சத்தான மற்றும் சுவையான ஸ்நாக்ஸ் மிகவும் அவசியம். இங்கே 3–6 வயது மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஆரோக்கிய மான ஸ்நாக்ஸ் குறிப்புகள் தொகுத்து அளித்துள்ளேன்.

### 2. 3-6 வயது குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள்

இந்த வயதில் குழந்தைகள் அதிக சுறுசுறுப்புடன் இருப்பார்கள். அவர்களுக்கு ஆற்றல் தரும் மற்றும் பல் வளர்ச்சிக்கு உதவும் சற்று கடினமான ஸ்நாக்ஸ்களை கொடுக்கலாம். அதே சமயம், சத்தானதாகவும் இருக்க வேண்டும்.



**முளைகட்டிய பயறுகள்**

பாசிப்பயறு, கொண்டைக்கடலை போன்றவற்றை முளைகட்டி வேகவைத்து, சிறிது உப்பு சேர்த்து கொடுக்கலாம். புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்தது.



**பனீர் துண்டுகள்**

பனீரை சிறிய துண்டுகளாக நறுக்கி, லேசாக வதக்கி கொடுக்கலாம். கால்சியம் மற்றும் புரதம் நிறைந்தது.

**சத்துமாவு உருண்டை**

பல தானியங்கள் மற்றும் பயறுகளைக் கொண்டு தயாரிக்கப் படும் சத்துமாவு உருண்டைகள், குழந்தைகளுக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் வழங்குகிறது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# தமிழகத்தில் 16ம் தேதி வரையில் மழைக்கான வாய்ப்பு!

சென்னை, மே 11

மன்னார் வளைகுடா பகுதியில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னார் வளைகுடா பகுதியில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியால், குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக இன்று (மே 12) தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கன மழை பெய்யக்கூடும்.

நாளை (மே 13) முதல் 16ம் தேதி வரை நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொருத்தவரை வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மீனவர்களைப் பொறுத்தமட்டில் தென்மேற்கு வங்கக்கடலின் சில பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென் கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

எனவே 14ம் தேதி வரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தி உள்ளது.

# அரியலூர் வட்டாரத்தில் உழவர் அடையாள அட்டை முகாமை பார்வையிட்ட வேளாண் துறை அதிகாரிகள்




அரியலூர், மே 11

அரியலூர் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி, அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், இ சேவை மையத்தில் நடைபெற்ற உழவர் அடையாள அட்டை வழங்கும் முகாமை பார்வையிட்டார். அவருடன் வேளாண்மை உதவி இயக்குனர் பொறுப்பு ஜென்சி, வேளாண்மை அலுவலர் சிந்துஜா, வேளாண்மை உதவி அலுவலர் வேல்முருகன் மற்றும் ஸ்ரீதேவி கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் ஆறு வட்டார பகுதியில் 195 வருவாய் கிராமங்கள், இதில் 1,20,507 நில உரிமையாளர்கள், உள்ளனர். இதில் பி எம் கிசான் பயனாளிகள் 1,11,547 உள்ளனர். மாவட்டத்தில் மொத்தம் 94,929 நில உடமை பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதம் 25,578 நில உரிமையாளர்கள், இதுவரை நில உடமை பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. உடனடியாக பதிவு செய்யாத விவசாயிகள், தங்கள் வட்டார பகுதியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தோட்டக்கலை அலுவலர்களை சந்தித்து தங்கள் நிலத்தின் விவரத்தினை பதிவு செய்ய வேண்டும். நில உடமை பதிவேடு (FR) வேளாண்மை துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மையின் சகோதரத்துறைகள் அலுவலர்கள் மூலம் பதிவு செய்யலாம் என வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு உழவர் அடையாள அட்டை என்பது விவசாயி களுக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் அடையாளம் ஆகும். விவசாயிகள் இத்தகைய உழவர் அடையாள அட்டை பெறுவதற்கு ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண், தங் களின் நிலத்தின் சப் டிவின் மற்றும் சர்வே எண்கள் போதுமானது. உடனடியாக விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள இ சேவை மையம் மூலமாகவும் பதிவு செய்யலாம். நில உடமை பதிவேட்டில் பதிவு செய்த விவசாயிகளில் நிலங்களில் மூலம் மாவட்டத்தில் மொத்த பயிர்களின் சாகுபடி பரப்பு, உற்பத்தி கணக்கீடு செய்ய இயலும், மேலும் பூச்சி நோய் தாக்குதல் விவரம் மற்றும் பயிர் சேதம் கணக்கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடியும்.

விவசாயிகளுக்கு அனைத்து இடுபொருள்களும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்படும். இடுபொருள் களுக்கு, பயிர் காப்பீடு திட்டம் இயற்கை பேரிடர் நிவாரணத் தொகை மற்றும் விவசாயிகளுக்கான அனைத்து திட்டங்களுக்கும் விவசாயிகள் கண்டிப்பாக தங்களின் நிலத்தினை நில உடமை பதிவேட்டில் பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும். விவசாயிகள் பல்வேறு வகையில் பயனடையும் அனைத்து திட்டங்கள் திட்டங்களுக்கும் கட்டாயமாக நில உடமை பதிவேட்டில் தங்கள் நிலத்தை பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.




# காவிரி டெல்டா பாசனத்திற்கேற்ற உயர் விளைச்சல் தரும் நெல் இரகங்கள்

குறுவைப் பருவம் என்பது நெல் விதைப்பு தொடங்கும் பருவமாகும். இப்பருவம் ஜூன் – ஜூலை மாதங்களில் தொடங்கி செப்டம்பர் – அக்டோபர் மாதங்களில் முடிவடைகிறது. குறுவைப் பருவத்தில் குறுகிய கால நெல் இரகங்கள் சாகுபடி செய்யப் படுகிறது. மேலும் இந்த குறுவை சாகுபடி காலகட்டத்தில் விதைப்பு அல்லது நடவு முதல் அறுவடை வரை நிலவும் தட்ப வெட்ப நிலைகள் பயிர்களை நன்கு வளரச் செய்யும். மேலும் பூச்சி மற்றும் பூஞ்சான நோய்களின் தாக்குதலையும் குறைக் கின்றது. எனவே குறுவைப் பட்டத்தில் விதைக்கப்படும் நெல் இரகங்கள் நல்ல விளைச்சலை கொடுக்கும் திறன் கொண்டவை. இவ்வாறு குறுவை சாகுபடிக்கு ஏற்ற நெல் இரகங்களை பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

**ஏ.எஸ்.டி 21**

120 நாட்கள் வயதுடைய இந்த நெல் ரகமானது கார், குறுவை மற்றும் பிசானம் ஆகிய பருவங்களில் பயிரிட ஏற்றது. குட்டை பருமனான நெல் மணிகளை கொண்ட இந்த ரகம் ஒரு ஹெக்டருக்கு 6330 கிலோ மகசூல் கொடுக்க வல்லது. மேலும் தண்டு துளைப்பான், இலை மடக்குக்கு புழு, ஆணைக் கொம்பன், குலை நோய் மற்றும் பாக்டிரியா இலை கருக்கல் நோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது.

**ஏ.டி.டி 57**

மத்திம சன்ன அரிசியை உடைய இந்த ரகம் 115 நாட்களில் ஒரு ஹெக்டருக்கு 6502 கிலோ மகசூல் கொடுக்க வல்லது. இது தமிழ்நாட்டில் கார், குறுவை, நவரை மற்றும் சொர்ணவாரி பருவங்களில் பயிரிட ஏற்றது. இது சமைப்பதற்கு மிகவும் ஏற்ற ரகமாகும். இந்த ரகம் குலைநோய்க்கு எதிர்ப்புத்திறனும், இலை உறை கருகல், பழுப்பு புள்ளிநோய், துங்குரோ, குருத்துப்பூச்சி, இலைமடக்குப்புழு மற்றும் புகையான் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## கோ 54

இது சொர்ணவாரி, கார், குறுவை, நவரை பட்டங்களுக்கு ஏற்றது. 110 முதல் 115 நாட்கள் வயதுடைய இந்த ரகம் ஒரு ஹெக்டருக்கு 6350 கிலோ மகசூல் கொடுக்க வல்லது. இந்த ரகம் புகையான், குலைநோய்க்கு எதிர்ப்புத்திறனும், இலை உறை கருகல், பழுப்பு புள்ளிநோய் ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது. இந்த ரகத்தின் அரிசி மத்திம சன்னமாகவும் வெண்மை நிறத்திலும் இருக்கும். இந்த ரகத்தில் அமைலோஸ் என்ற மாவு பொருள் குறைந்த அளவில் இருப்பதால் இது சமைப்பதற்கு மிகச் சிறந்தது.

## ஏ.டி.ட்டி 53

110 நாட்கள் வயதுடைய இந்த ரகம் குறுவை, கோடை மற்றும் நவரை பட்டங்களுக்கு ஏற்றது. இதன் சராசரி மகசூல் ஒரு ஹெக்டருக்கு 6334 கிலோ ஆகும். இது நடுத்தர சன்ன அரிசியும், தண்டுத்துளைப்பான், இலைமடக்குப்புழு, குலை நோய் இலைஉறை அழுகல் நோய் மற்றும் செம்புள்ளி நோய்களுக்கு மிதமான எதிர்ப்புத்திறனும் உடையது.

## ஏ.டி.ட்டி 55

நடுத்தர உயரமும் சாயாத தன்மையும் கொண்டுள்ள இந்த ரகம் கார், குறுவை மற்றும் கோடைப்பருவத்தில் நடவு பயிராக சாகுபடி செய்ய ஏற்றது. 115 நாட்கள் வயதுடைய இந்த ரகம் ஒரு ஹெக்டருக்கு சராசரியாக 5930 கிலோ மகசூல் கொடுக்க வல்லது. இந்த ரகம் பாக்டிரிய கருகல் நோய்க்கு எதிர்ப்புச்சக்தி கொண்டுள்ளது. இந்த நடுத்தர சன்ன வெள்ளை நிற அரிசியை கொண்டுள்ளது. மேலும் சமைப்பதற்கும் ஏற்றது.

## எம்.டி.யு. 6

இது 110 ல் இருந்து 115 நாட்களில் சராசரி மகசூலாக இறவையில் ஒரு ஹெக்டருக்கு 6118 கிலோ கொடுக்க வல்லது. நீண்ட சன்ன அரிசியை உடைய இந்த ரகம் சிறந்த சமையல் பண்புகளை உடையது. பொங்கல், அவல் மற்றும் பொரி தயாரிப்பதற்கு இதன் பச்சை அரிசி மிகவும் ஏற்றது. இலைசுருட்டு புழு, தண்டுத்துளைப்பான், பச்சைத் தத்துப்பூச்சி மற்றும் வெண் முதுகு பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது.

**டி.பி.எஸ் 5**

இது ஒரு ஹெக்டருக்கு சராசரியாக 6300 கிலோ விளைச்சல் தர வல்லது. இது தண்டுத்துளைப்பான், இலைசுருட்டுப்புழு மற்றும் புகையான் பூச்சிகளுக்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது. நல்ல அரவை திறன் கொண்ட இந்த ரகத்தின் அரிசி குறுகிய தடிமனான பண்பை கொண்டுள்ளது. இந்த ரகம் கார் மற்றும் பிந்திய பிசான பருவங்களில் பயிரிட ஏற்றது.


**கோ 51**

குட்டையான செடிகளை உடைய இந்த ரகம் 105 லிருந்து 110 நாட்களில் ஒரு ஹெக்டருக்கு 6623 கிலோ மகசூல் கொடுக்க வல்லது. இந்த ரகம் குலைநோய், புகையான் மற்றும் பச்சை இலை தத்துப்பூச்சி ஆகியவற்றிற்கு மிதமான எதிர்ப்புத்திறன் உடையது. மேலும் இந்த ரகத்தின் அரிசியானது மத்திம வெள்ளை நிற சன்ன அரிசியாகும் அதிக அரவைத்திறன் மற்றும் முழு அரிசி காணும் திறன் பெற்றுள்ளது.

எனவே குறுவை பட்ட நெல் சாகுபடி மேற்கொள்ள இருக்கும் விவசாயிகள் விதைப்பரிசோதனை மேற்கொள்ள 100 கிராம் நெல் விதை மாதிரியுடன் மற்றும் ஒரு மாதிரிக்கு ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) கட்டணத்துடன் எண்.15-பி, பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் செயல்படும் திருவாரூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தை அணுகி பயன் பெறுமாறு அழைக்கப்படுகிறார்கள்.

ஆகவே குறுவை பருவத்தில் விவசாயிகள் தங்கள் வயல் சூழ்நிலைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற உயர் விளைச்சல் தரக்கூடிய இரகத்தினை தேர்வு செய்து விதையின் தரத்தினை திருவாரூர் மாவட்ட விதைப்பரிசோதனை நிலையத்தில் உறுதி செய்து, பரிந்துரைக்கப்படும் தொழில்நுட்பங்களைக் கடைப் பிடித்து அதிக விளைச்சலும் இலாபமும் பெற்று திருவாரூர் மாவட்ட உணவு உற்பத்தியை பெருக்குமாறு அறிவுறத்தப் படுகிறது.

மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் மாவட்டத்திற்கான ***தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி*** மற்றும் ***வேளாண்மை அலுவலர் ரா.அனந்தகுமார்*** ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மொட்டை மாடியில் இலவச மின்சாரம் மானியத்துடன் அமைப்பது எப்படி?



மக்களின் அத்தியாவசிய செலவுகளில் மின்சார கட்டணமும் ஒன்று. இதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை செலவு செய்ய வேண்டிய நிலை. ஆனால் மொட்டை மாடியில் சூரிய மின்சார தகடு அமைத்தால் அதுவும் மானியத்துடன் செய்தால் அந்த பணத்தை அப்படியே மிச்சப்படுத்தலாம். இதற்காக மத்திய அரசின் சூப்பர் மானியத்திட்டம் ஒன்று உள்ளது. அது பற்றிய இங்கே விரிவாக பார்ப்போம்.

நம்முடைய மின்சார பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும்,அதற்கேற்ப மின்கட்டணங்கள் (ELECTRICITY BILL) உயர்வது நமக்கு பெரும் கவலையான உள்ளது. இதிலிருந்து தப்பிக்க நாம் மின்சார நுகர்வோராக (CONSUMERS) மட்டு மல்லாமல் மின்சார உற்பத்தியாளராக மாற வேண்டியது கட்டாயமாகிறது.

எப்படி நமக்கான மின்சாரத்தை உருவாக்க முடியும். அதற்கு ஒரே வழி தான் சூரிய மின்சாரம் (SOLAR ELECTRICITY). சூரிய மின்சார உற்பத்தியில் தமிழகம் இந்தியாவில் 4வது இடத்தில் உள்ளது. மானியங்கள் 1 கிலோ வாட் முதல் 3 கிலோ வாட் வரை வழங்கப்படுகிறது.

**எங்கே அமைப்பது? எவ்வளவு மானியம்? தெரியுமா?**

சொந்த வீடும், மொட்டை மாடியும் இருந்தால் போதும். குறைந்த செலவில் 25 ஆண்டுகளுக்கு இலவச மின்சாரத்தை பெற முடியும்.

## சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை பெறுவது எப்படி?

சூரிய பேனல்களில் உள்ள சிலிக்கான் செல்கள் (PHOTO-VOLTAIC CELLS) சூரிய ஒளியை உள் வாங்கி நேரடியாக மின்னோட்டத்தை (D.C) மின்சாரமாக உருவாக்குகின்றனர். இது இன்வெர்ட்டர் மூலமாக நம் பயன்பாட்டிற்கு தேவையான மின்னோட்டமாக (A.C) யாக மாற்றப்படுகிறது.

எடுத்துக்காட்டாக ஒரு வீட்டிற்கு குறைந்த பட்சமாக 3 KW சோலார் கட்டமைப்பு அமைப்பதற்கு சுமாராக 2,10,000 செலவாகும். இதில் மத்திய அரசு மானியமாக 78000 வரை வழங்கப்படுகிறது. இது போக நாம் செய்யும் நிகர செலவாக ரூ.1,32,000 மட்டுமே. இதற்கு வங்கி கடனுதவியும் உண்டு.

இந்த 3 KW அமைத்தால் நாள் ஒன்றுக்கு 12 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். ஒரு மாதத்திற்கு சுமாராக 360 UNIT மின்சாரம் கிடைக்கும். நம்முடைய பயன்பாட்டிற்கு போக மீதமுள்ளவற்றை மின்சார வாரியத்திற்கு விற்பனை செய்யலாம். இப்படியாக நாமே நமக்கான மின்சாரத்தை தயாரித்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# இயற்கை வேளாண்மை தொடர்பான ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம்

கோயம்புத்தூர், மே 11

கோயம்புத்தூர், வேளாண் அறிவியல் நிலையத்தில் (KVK), வரும் வெள்ளிக்கிழமை (மே 15) அன்று காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை இயற்கை வேளாண்மை தொடர்பான ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இந்த பயிற்சியில் உயிர்சக்தி வேளாண்மையின் மகத்துவம், வேளாண்மை நாட்காட்டி (Agriculture Calendar) பயன்பாடு, சாணம் மற்றும் கால்நடை சார்ந்த இயற்கை உர தயாரிப்பு முறைகள், மண் வள மேம்பாடு மற்றும் இயற்கை பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட உள்ளது. இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். பயிற்சியாளர் வித்தியர்பு நவநீதகிருஷ்ணன் (Agri-culture and Information Systems) பயிற்சி வழங்குகிறார். மேலும் தகவல்களுக்கு 99528 66391/78128 03805 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

# குறுவை சாகுபடியில் அதிக மகசூல் பெற விதைப்பரிசோதனை செய்வீர்!

நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் குறுவை சாகுபடி மேற்கொள்ள உள்ள விவசாயிகள் குறுவை பருவ சாகுபடிக்கு உகந்த நெல் இரகங்களில் விதை பரிசோதனை அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்ட தரமான விதைகளை தேர்ந்து எடுத்து விதைப்பு மேற்கொண்டு அதிக மகசூல் பெற வேண்டும். விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள தரமான விதைகளின் முக்கிய காரணிகளான முளைப்புத்திறன், கலவன் இல்லாமை, பூச்சி நோய் தாக்கம் இல்லாத விதைகளை தேர்ந்து எடுத்து விதைப்பது அவசியமாகும்.

நெல் பயிருக்கு குறைந்தபட்சம் 80 சதவிகிதம் முளைப்புத் திறன் இருக்க வேண்டும். விதைகளின் முளைப்புத்திறன் தரத்தை அறிந்து கொள்ள விவசாயிகள், விதை உற்பத்தி யாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்கள் வசம் உள்ள விதைகளில் 100 கிராம்

என்ற அளவில் மாதிரிகள் எடுத்து விதை மாதிரிகளுடன் தங்கள் பெயர், இருப்பிட முகவரி மற்றும் பகுப்பாய்வு கட்டணமாக ரூ.80/- மூத்த வேளாண்மை அலுவலர், விதை பரிசோதனை நிலையம் நம்பர்.15, காளியம்மன் கோவில் தெரு, நாகப்பட்டினத்தில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்து விதைப்பதினால் விதைச் செலவை குறைத்து கொள்வதுடன் அதிக மகசூலை பெற்று பயனடையலாம்.

இவ்வாறு ***நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன்*** மற்றும் ***வேளாண்மை அலுவலர்கள் அ.அமுதாதேவி, செ.பிரசன்னா*** தெரிவித்துள்ளனர்.




# நாவற்பழத்திற்கான உலர்த்தல் தொழில்நுட்பங்கள்

**அறிமுகம்**

நாவற்பழம் (Syzygium cumini) ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ குணங்கள் நிறைந்த வெப்பமண்டலப் பழமாகும். இதில் ஆன்டி-ஆக்சிடென்ட் கூறுகள் மற்றும் இரத்தச் சர்க்கரை கட்டுப்பாட்டிற்கு உதவும் சேர்மங்கள் காணப்படுகின்றன. ஆனால் அதிக ஈரப்பதம் காரணமாக அறுவடைக்குப் பிறகு இது விரைவில் கெடுகிறது. இந்த சவாலுக்கு தீர்வாக உலர்த்தல் தொழில்நுட்பம் பயன்படுகிறது. தெளிப்பு உலர்த்தல், நுரைத் தாள் உலர்த்தல் மற்றும் ஒஸ்மோட்டிக் உலர்த்தல் போன்ற முறைகள் மூலம் ஈரப்பதம் குறைக்கப்பட்டு, ஊட்டச்சத்து மற்றும் நிறம் பாது காக்கப்படுகின்றன. இதன் மூலம் நாவற்பழம் நீண்டகாலம் சேமித்து தொழில்துறையில் பயன்படுத்த முடிகிறது.

**உலர்த்தல்**

தோட்டக்கலைப் பயிர்களை பாதுகாக்கப் பயன்படும் மிகப் பழமையானதும் செலவுக் குறைந்ததும் ஆன முறையாக உலர்த்தல் விளங்குகிறது.

பழங்கள், காய்கறிகள், தோட்டப் பயிர்கள் மற்றும் மசாலா வகைகளை உலர்த்துவதற்காக சூரிய உலர்த்திகள் பயன் படுத்தப்படுவது குறித்து பரந்த அளவிலான அறிவும் அனுப வமும் உள்ளது. உலர்த்தும் செயல்முறைக்கு முன், பழங்கள் மற்றும் காய்கறிகளில் தோல் நீக்கம், துண்டாக்குதல், வெந்நீர் சிகிச்சை, சல்பர் சிகிச்சை போன்ற முன் சிகிச்சைகள் அளிக்கப் படுகின்றன. இம்முன் சிகிச்சைகள் உலர்த்தல் செயல்முறையை எளிதாக்குவதுடன், உலர்ந்த தயாரிப்புகளின் தரத்தையும் மேம்படுத்துகின்றன.

**தெளிப்பு உலர்த்தும் தொழில்நுட்பம்**

தெளிப்பு உலர்த்தல் என்பது நாவற்பழம் பழச்சாறுகளை தூள் வடிவமாக மாற்றும் ஒரு நீர்நீக்க தொழில்நுட்பமாகும். இந்த முறையின் மூலம், உண்மையான ஊட்டச்சத்து மதிப்புகள் பாதுகாக்கப்பட்டு, அறை வெப்பநிலையில் நீண்ட கால நிலைத் தன்மை பெறப்படுகிறது.

**தெளிப்பு உலர்த்தல் செயல்முறை மூன்று முக்கிய கட்டங்களை கொண்டது :**

(a) அணுவாக்கம் – திரவ உணவு மிகச் சிறிய துளிகள் அல்லது துகள்களாக மாற்றப்படுவது,

(b) இத்துளிகள் மற்றும் சூடான காற்றின் தொடர்பு – இதன் மூலம் ஈரப்பதம் ஆவியாக்கப்படுகிறது,

(c) உலர்ந்த தயாரிப்பை வெளியேறும் காற்றிலிருந்து பிரித்தெடுத்தல்.



தெளிப்பு உலர்த்தி

அணுவாக்க கட்டம் மிக முக்கியமானதாகும். ஏனெனில், இது திரவத்தை சமமாகப் பரவச் செய்து, பொருளின் அமைப்பு பாதிக்கப்படாமல் ஈரப்பதத்தை அகற்ற உதவுகிறது. தெளிப்பு உலர்த்தலில் பொதுவாக சுற்றுச்சூழல் காற்றே உலர்த்தும் ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

உலர்ந்த தயாரிப்பு, உலர்த்தியின் வெளியே அமைக்கப்பட்ட சைக்ளோன் மூலம் பிரித்தெடுக்கப்படுவதால், பொருள் இழப்பு குறைக்கப்படுகிறது.



தெளிப்பு உலர்த்தப் பட்ட ஜாமுன் பழத் தூள்

தெளிப்பு உலர்த்திகள் இணை ஓட்டம், எதிர் ஓட்டம் மற்றும் கலப்பு ஓட்டம் போன்ற பல வடிவமைப்புகளில் கிடைக்கின்றன. இவற்றில், இணை ஓட்ட தெளிப்பு உலர்த்திகள் அதிகமாகவும் பரவலாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மொத்தத்தில், தெளிப்பு உலர்த்தல் முறையால் நாவற்பழம் பழத் தூள்களை ஊட்டச் சத்து குணங்கள் பாதிக்கப்படாமல் நிலையான வடிவில் தயாரிக்க முடிகிறது.

**நுரை பாய் உலர்த்தும் தொழில்நுட்பம்**

நுரை பாய் உலர்த்தல் முறையில், நாவற்பழம் பழக் குழம்பு அல்லது சாறு, நிலைத்தன்மை அளிக்கும் பொருட்கள் மற்றும்/ அல்லது நுரை உருவாக்கும் முகவர்களுடன் கலக்கப்பட்டு நிலையான நுரையாக மாற்றப்படுகிறது.

இந்த நுரை தட்டுகளில் பரப்பப்பட்டு, 50-80°C வெப்ப நிலையில் காற்று உலர்த்தலுக்கு உட்படுத்தப்படுகிறது. உலர்த் தலுக்குப் பிறகு, தயாரிப்பு தூள் வடிவமாக அரைக்கப்படுகிறது.

தெளிப்பு உலர்த்தல் மற்றும் ஃப்ரீஸ் உலர்த்தல் போன்ற அதிக செலவு முறைகளுடன் ஒப்பிடுகையில், நுரை பாய் உலர்த்தல் எளிமையும் குறைந்த செலவும் கொண்டதாகும். நுரையின் மூலம் மேற்பரப்பு பரப்பளவு அதிகரிப்பதால், பாரம்பரிய காற்று உலர்த்தலை விட உலர்த்தல் வேகம் அதிகமாகும். இதனால் ஆற்றல் செலவு குறைந்து, தயாரிப்பின் தரம் மேம்படுகிறது. இந்த முறையில் தயாரிக்கப்படும் பொருட்கள் துளையுள்ள அமைப்பையும், சிறந்த மீள் ஈரப்படுத்தும் திறனையும் கொண்ட தாக இருப்பதாக குறிப்பிடுகின்றனர். எனவே, நாவற்பழம் பழத் தூள்களை தரத்துடன் குறைந்த செலவில் தயாரிக்க இந்த முறை மிகவும் பயனுள்ளதாகும்.




**நுரை பாய் உலர்த்தப்பட்ட ஜாமுன் பழத் தூள்**

### ஆஸ்மோடிக் நீரிழப்பு தொழில்நுட்பம்

ஆஸ்மோடிக் நீர்நீக்கம் என்பது பழங்கள் அல்லது காய்கறிகள் போன்ற உணவுப் பொருட்களை அதிக ஆஸ்மோடிக் அழுத்தம் கொண்ட திரவத்தில் மூழ்கடிக்கும் ஒரு செயல்முறையாகும். இதன் மூலம் உணவிலிருந்து ஒரு பகுதி நீர் அகற்றப்பட்டு, இடைநிலை ஈரப்பதம் கொண்ட தயாரிப்பு பெறப்படுகிறது. உணவின் சிக்கலான செல்யூலார் அமைப்பு, அரை ஊடுருவும் உறை போல செயல்பட்டு, ஒரே நேரத்தில் இரண்டு எதிர்திசை ஓட்டங்களை ஏற்படுத்துகிறது.

முதன்மை ஓட்டமாக, உணவிலிருந்து ஈரப்பதம் வெளியே பரவுகிறது. இரண்டாம் நிலை ஓட்டமாக, ஆஸ்மோடிக் திரவத்தில் உள்ள கரைந்த திண்மங்கள் உணவுக்குள் ஊடுருவுகின்றன. இதன் மூலம், குறைந்த அளவு செயலாக்கம் செய்யப்பட்ட, புதிய தன்மையைப் போன்ற பண்புகள் கொண்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த முறை, ஊட்டச்சத்து பாதுகாக்கப்பட்ட தயாரிப்புகளை விரும்பும் நுகர்வோர் தேவைகளை பூர்த்தி செய்கிறது. இச் செயல் முறையில் பயன்படுத்தப்படும் ஆஸ்மோடிக் முகவர்கள் சர்க்கரை, உப்பு, மாவுப் பொருட்கள் அல்லது இவற்றின் கலவை யாக இருக்கலாம். ஊட்டச்சத்து மதிப்பும் சுத்தத்தன்மையும் பாதிக்கப்படாமல் நீர் அகற்றப்படுவதால், இது ஒரு பயனுள்ள பாதுகாப்பு முறை யாகும்.



**ஆஸ்மோடிக் நீர்நீக்கி**

நாவற்பழம் பழங்களின் ஆஸ்மோடிக் நீர்நீக்க செயல்வழிப் படம்

பழங்களின் தேர்வு

↓

கழுவுதல் மற்றும் தரமிடல்

↓

அதிக ஆஸ்மோடிக் அழுத்தம் கொண்ட திரவத்தில் பழங்களை மூழ்கடித்தல்

↓

நீர் வடிதல்

↓

உலர்த்தல்

↓

பேக்கேஜிங் செய்தல்

↓

சேமிப்பு

**முடிவுரை**

உலர்த்தல் தொழில்நுட்பம் நாவற்பழத்தை அறுவடை காலத்தைத் தாண்டியும் பாதுகாக்க உதவுகிறது. நவீன உலர்த்தல் முறைகள் ஊட்டச்சத்து மற்றும் ஆன்டி–ஆக்சிடென்ட் கூறுகளை பாதுகாத்து தரமான தயாரிப்புகளை வழங்குகின்றன. இதன் மூலம் சேமிப்பு காலம் நீடித்து, இழப்புகள் குறைகின்றன. மேலும், நாவற்பழத் தூள் மற்றும் உலர்ந்த தயாரிப்புகள் மூலம் செயல்பாட்டு உணவுகள் மற்றும் ஊட்டச்சத்து துறைகளில் பயன்பாடு அதிகரிக்கிறது.

தகவல் : *ச.பர்வீன், செ.மணிகண்டன், பா.ஹேமலதா, க.ஞா.கவிதா ஸ்ரீ, பி.ராஜ்குமார்.*

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

**RITHVIK PIPES PROUDLY TRUSTED BY**

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வாலாஜா வட்டாரத்தில், வேளாண் அடுக்கக திட்டத்தில் விவசாயிகளுக்கு தனி அடையாள எண் வழங்க மே 31 ஆம் தேதி கடைசி நாள்

ராணிப்பேட்டை, மே 11

விவசாயிகள், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நலத்திட்டங்களை தொடர்ந்து பெற வேளாண் அடுக்கக திட்டத்தில் பதிவு செய்து தனிப்பட்ட அடையாள எண் பெற அவசியமாக்கப்பட்டுள்ளது என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தெரிவித்துள்ளார்.

வாலாஜா வட்டாரத்தில், பி எம் கிசான் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ரூபாய் 6000 பெற்று வரும் விவசாயிகளில் 382 விவசாயிகள் இதுவரை வேளாண் அடுக்கக திட்டத்தில் பதிவு செய்யவில்லை. விவசாயிகள் பி எம் கிசான் நிதி உதவி தொடர்ந்து பெற வேளாண் அடுக்கக திட்டத்தில், அடையாள எண் பெற வேண்டும்.

அதேபோல், நுண்ணீர் பாசன திட்டதில் பயன் பெற்ற வாலாஜா வட்டார விவசாயிகளில் 166 விவசாய பயனாளிகள் வேளாண் அடுக்கக திட்டத்தில் பதிவு செய்யவில்லை. அடையாள எண் பெறாதவர்களுக்கு பயிர் காப்பீடு திட்ட பலன்களும் கிடைக்காது.


எனவே வாலாஜா வட்டார வேளாண் அடுக்கக திட்டத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்யாத விவசாயிகள் தங்கள் ஆதார் அட்டை, சிட்டா மற்றும் ஆதார் இணைக்கப்பட்ட செல்போன் எண்ணுடன் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் அல்லது பொது சேவை மையங்களுக்கு சென்று பதிவு செய்து கொள்ளலாம்.

இத்திட்டத்தில் பதிவு செய்ய, வரும் மே 31ஆம் தேதி கடைசி நாள் ஆகும். அதே நேரத்தில் சொந்த பெயரில் நிலம் இருந்தால் மட்டுமே இந்த அடையாள எண்ணை பெற முடியும். எனவே நிலம் இன்னும் தங்கள் பேருக்கு மாறாமல் உள்ள வாரிசுதாரர்கள், நில ஆவணங்களுடன், வாரிசுதாரர் சான்று, ஆதார் அட்டை ஆகிய ஆவணங்களை, வாலாஜா வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் சமர்ப்பித்திட வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

# ஒரு தொட்டி, ஒரு தொழில் ....
# அசோலா - ஒரு பார்வை

## முன்னுரை

இன்றைய காலத்தில் குறைந்த முதலீட்டில் நல்ல வருமானம்தரக்கூடிய தொழில்களை அனைவரும் தேடி வருகின்றனர். குறிப்பாக இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் வீட்டிலிருந்தபடியே செய்யக்கூடிய புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுகின்றனர். அத்தகைய சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாகத் திகழ்வது அசோலா வளர்ப்பு. ஒரு சிறிய தொட்டியில் தொடங்கி நல்ல வருமானம் தரக்கூடிய இந்த பசுமைத் தொழில் இன்று பலரின் கவனத்தை ஈர்த்து வருகிறது. அசோலா என்பது நீர் நிலைகளில் மிதந்து வளரக்கூடிய ஒரு பெரணி வகையினைச் சார்ந்த தாவரமாகும். முற்றிலும் நீரை மட்டுமே சார்ந்து வளரக்கூடிய இந்த தாவரம் வளிமண்டலத்தில் இருக்கக்கூடிய தழைச்சத்தை மண்ணில் இணைத்து உடனடியாக செடிகள் மற்றும் கொடிகள் வளர பயன்படுத்த வைக்கும் ஒரு உதவியை செய்கிறது. தழைச்சத்தை நிலைநிறுத்தும் வேலை நீலப்பச்சை பாசியான அனபீனா அசோலாவுடன் கூட்டுவாழ்க்கையின் மூலம் நடைபெறுகிறது.




## அசோலாவிலுள்ளச் சத்துக்கள்

அசோலாவில்,புரதச்சத்து 25-30%, நார்ச்சத்து 14-15%, கொழுப்புச் குசத்து 3-4%, மாவுச்சத்து 4.1 - 6.5%, கார்போ ஹைடிரேட்டுகள் 45-50%, தாது உப்புகள் (கால்சியம், பாஸ்பரஸ்,

பொட்டாசியம், மெக்னீசியம்) மற்றும் பல நுண்ணுயிரிகள் உள்ளதாக ஆராய்ச்சிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அசோலா தென்கிழக்காசிய நாடுகளிலும், சீனாவிலும், நெல் விளையும் பகுதியில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. மேலும், அனைத்து நெல் பயிரிடும் நாடுகளிலும் இதனை தற்போது பெருமளவு பயன்படுத்த தொடங்கியுள்ளனர். பிலிப்பைன்ஸ், இந்தியா, இலங்கை, வியட்நாம், இந்தோனேசியா போன்ற நாடுகளில் பல வித ஆராய்ச்சிகளின் மூலம், அசோலா நெற் பயிறுக்கு நல்ல பயன் தரக்கூடிய உயிர் உரம் என்று கண்டறிந்துள்ளார்கள்.



## அசோலா வளர்க்கும் முறை

1) சிமெண்ட் தொட்டி முறை 2) தார்பூலின் குழி முறை (தார்பாய்)
3) குளம் முறை 4) தட்டு முறை
5) மண்ணில்லா வேளாண்மை முறை
6) நிழல் வலை சாகுபடி முறை. அசோலா வளர்ப்பதற்கு பலவித முறைகள் இருந்திருந்தாலும் சிறந்த முறையாக கருதப் படுவது சிமெண்ட் தொட்டி முறை மற்றும் தார்பூலின் குழி முறை ஆகும்.

## சிமெண்ட் தொட்டி முறை

### தேவையான பொருட்கள்

1) தொட்டி
2) சுத்தமான நீர்ப்பாசன வசதி
3) மண்
4) மாட்டு சாணக்கரைசல்
5) சிங்கள் சூப்பர் பாஸ்பேட்
6) அசோலா இலைகள்
7) நிழல் அல்லது பகுதி நேர வெயில்
8) நீர் இறைக்கும் வாளி
9) அறுவடைக்கு சல்லடை அல்லது வலை
10) வழக்கமான தினசரி சுத்தம் மற்றும் பராமரிப்பு



### சிமெண்ட் தொட்டியின் செய்முறை

10 அடி நீளம், 2 அடி அகலம், 1 அடி ஆழம், 25- 30 கிலோ மண்ணை பரப்பி, அதில்,5 கிலோ மக்கிய சாணம் கலந்து 50-100 கிராம் ராக் பாஸ்பேட் அல்லது கனிமச்சத்து சேர்க்கலாம்.நீரின் அளவு 5 சென்டிமீட்டர். 5 கிலோ அசோலா இடுவதால் இரண்டு வாரங்களில் 35-40 கிலோ அசோலாவை சேகரித்து எடுக்கலாம். (அசோலாவின் வளர்ச்சி சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடும்).

**முக்கிய குறிப்பு :** 10 நாட்களுக்கு ஒரு முறை சாணக்கரைசலை ஊற்ற வேண்டும்.

நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ இடலாம். இதனால் பயிருக்கு தழைச்சத்து கிடைப்பதோடு மட்டுமல்லாமல் 15-20% மகசூலும் அதிகரிக்கிறது.

## தார்பூலின் குழிமுறை

### தேவையான பொருட்கள்

1) திறந்தவெளி அல்லது சமமான நிலம்
2) மண்ணில் ஆழமற்ற குழி
3) தார்பூலின் தாள்
4) செங்கற்கள் விளிம்புகளை தாங்க மண் அடைப்பு
5) வளமான மண்
6) மாட்டு சாணக்கரைசல்
7) சிங்கள் சூப்பர் பாஸ்பேட்
8) அசோலா இலைகள்
9) நிழல் அல்லது பகுதி நேர வெயில்
10) நீர் இறைக்கும் வாளி
11) அறுவடைக்கு சல்லடை அல்லது வலை
12) வழக்கமான தினசரி சுத்தம் மற்றும் பராமரிப்பு



## தார்பூலின் குழிசெய்முறை

10 அடி நீளம், 6 அடி அகலம், 1 அடி ஆழம், ஒரு சீரான மற்றும் நிழலான நிலத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆழமற்ற குழியை மண்ணில் தோண்டிய பிறகு அதில் தார்பூலின் தாளைப் பரப்ப வேண்டும். 10-15 கிலோ வளமான மண்ணை சேர்க்க வேண்டும். அதனுடன் 2-3 கிலோ நன்கு மக்கிய மாட்டு சாணக்கரைசலையும் சேர்க்க வேண்டும். இறுதியாக 5-10 சென்டிமீட்டர் ஆழம் நீரின் அளவை பராமரிக்க வேண்டும். நீருடன் சேர்த்து 1-2 கிலோ அசோலாவையும் குழியில் இட வேண்டும்.

## அசோலாவின் தீவன அளவு மற்றும் நன்மைகள்

முதல்முறை கால்நடைகளுக்கு அசோலாவை தீவனமாக கொடுக்கும்பொழுது அடர் தீவனம் 1 பங்கு, அசோலா 1 பங்கு என்ற விதத்தில் அளிக்க வேண்டும். நன்கு பழக்கப்பட்டப் பிறகு கறவைமாடுகளால் அசோலாவை மட்டுமே தீவனமாக உட்கொள்ளும்.

### நாளொன்றிற்கான அசோலா தீவன அளவு

1) கறவை மாடு = 1-1.5 கிலோ
2) ஆடு = 300-500 கிராம்
3) முயல் = 100 கிராம்
1 கிலோ அசோலா = 1 கிலோ புண்ணாக்கு

4) கோழிகள் = 25-30கிராம்

இவ்வாறு கொடுக்கும் பொழுது கறவை மாடுகளில் 15-20% பால் உற்பத்தி அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கோழிகளில் உடல் எடை, முட்டையின் அளவு மற்றும் முட்டையின் மஞ்சள் கருவின் அடர்த்தியும் அதிகரிப்பதாக ஆய்வுகளில் கூறப்படு கிறது.

**அசோலா வளர்ப்பில் வருமான வேலைவாய்ப்புகள்**

1) புதிய அசோலாவை பால் பண்ணை விவசாயிகளுக்கு விற்பனை செய்தல்.

2) ஆடு கோழி மீன் ஆகியவற்றின் தீவனமாக விற்பனை செய்தல்

3) காயவைத்த அசோலா போடி விற்பனை செய்தல்

4)இயற்கை விவசாயிகளுக்கு இயற்கை உரமாக வழங்குதல்

**அசோலா என்பது ஒரு தொழில்**

அசோலா வளர்ப்பு என்பது ஒரு சிறந்த மற்றும் குறைந்த முதலீட்டில் இலாபம் தரக்கூடிய வணிக வாய்ப்பு. ஏனென்றால் இது மிகவும் விரைவாக வளர்ந்து சில நாட்களுக்குள்ளேயே அறுவடைக்குத் தயாராகி விடுவதோடு மட்டுமல்லாமல் விரைவான வருமானத்தையும் கொடுத்துவிடும்.

அசோலா சத்து அதிகம் நிறைந்த செடியாக கருதப்படுகிறது. எனவே, இது ஆடு, மாடு போன்ற கால்நடைகள் மற்றும் கோழி, மீன் ஆகியவற்றிற்கு தீவனமாக கொடுக்கலாம். இது ஒரு சிறந்த இயற்கை உரமாகும்.மேலும், இவை தொட்டிகள், குழிகள் மற்றும் சிறிய பகுதிகள் ஆகியவற்றில் வளர்க்கப்படுவதால் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், பெண்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ஒரு சிறந்த வருமானம் தரும் சிறு தொழி லாகத் திகழ்கிறது. ஆகவே, நிலையான விவசாயம் மற்றும் குறைந்த செலவிலான கால்நடை தீவனத்திற்கு, அசோலா ஒரு லாபகரமான சிறுதொழிலாக சிறந்து விளங்குகிறது.

**செலவு மற்றும் இலாபத்தின் மதிப்பீடு (ஒரு தொட்டி அல்லது குழி)**

1) தொட்டி அல்லது தர்பூலின் = ₹1,000 மிலி ₹3,000
2) மண், மாட்டுச்சாணம், ஊட்டச்சத்துக்கள்=₹300 மிலி ₹700

3)அசோலா = ₹300 மிலி ₹800

4)மற்ற தேவைகள் = ₹200 மிலி ₹500

**மொத்த தொடக்க செலவு = ₹1,800 மிலி ₹5,000**

**மாத பராமரிப்பு செலவு**

1) ஊட்டச்சத்துக்கள் / மாட்டுச்சாணம் = ₹200 மிலி ₹500

2) நீர்ப்பாசனம் / வேலையாட்கள் = ₹300 மிலி ₹700

**மொத்த மாத செலவு = ₹500 மிலி ₹1,200**

**மாத வருமானம் (விற்பனையை பொறுத்தது)**

1) சுத்தமான அசோலா விற்பனை= ₹2,000 மிலி ₹6,000

2) ஆரம்ப நிலை அசோலா / அசோலா பொடி = கூடுதல் வருமானத்திற்கு வாய்ப்புள்ளது.

**மதிப்பிடப்பட்ட மாதாந்திர லாபம் = ₹1,000 மிலி ₹5,000**

**கருத்துரை :**

அசோலா வளர்ப்பு என்பது எளிமையானது, குறைந்த செலவிலானது மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய முறையாகவும், பயிர்களுக்கு இயற்கை உரமாகவும், கால்நடைகளுக்கு சத்தான தீவனமாகவும்,இலாபகரமான சிறுதொழிலாகவும் பயன்பட்டு வருகிறது.

குறைந்த இடம், குறைந்த முதலீடு மற்றும் எளிய பராமரிப்புடன் அனைவரும் இந்தஅசோலா வளர்ப்பை தொடங்கலாம். ஆகையால், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கவும் அசோலா ஒரு சிறந்த நீடித்தத் தொழிலாக படித்த பட்டதாரிகளுக்கு ஒரு முக்கியத் தொழிலாக பங்கு வகிக்கிறது

தகவல் : ***பூர்ணிமா, 4ஆம் ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவி மற்றும் டாக்டர் இளம்பரிதி, ஆசிரியர், நுண்ணுயிரியல் துறை, இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, துறையூர்.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**